**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2023ம் வருடம் டிசம்பர் மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.1/2022**
**In**
**OS 176/2022**

1. சகுந்தலாதேவி
2. காசிலிங்கம் ..மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1. பாண்டித்தேவர்
2. செல்வக்குமார்
3. ராதிகா ...எதிர்மனுதார்கள்/8,9,10பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 19.12.2023ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதாாகள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. M. மோகனசுந்தரம். பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் D. அன்பழகன். பி.ஏ.,பி.எல்.,அவர்கள் முன்னிலையாகியும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று (22.12.2023) இந்நீதிமன்றம் வழங்கலான:-

**உத்திரவு**

இம்மனுவானது, தாவா சொத்துக்களில் 1ம் மனுதாரின் 1/4 பாகத்தையும் நியமிடர் பார்த்து அத்துமால் செய்து பிரித்து 1ம் மனுதார் வசம் ஒப்படைக்கும் வரை தாவா சொத்துக்களைப் பொறுத்து இந்த நிர் எதிர்மனுதார்களோ, மேற்படியார்களின் ஆட்களோ யாதொரு வில்லங்கமோ, விற்கிரையமோ, பந்தக பராதீனமோ செய்யாதவாறு தாவா வழக்கு முடியும் வரை ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பித்தும், அதே டேர்ம்ஸில் தாவா மனு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரகள்/வாதிகள் தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதார்கள் தங்களது மனுவில், தாவா **'A' schedule** சொத்துக்கள் 1ம் மனுதாரின் தகப்பனார் நாகு அம்பலத்தேவர் அவர்களின் பூர்விகப் பாத்திய அனுபவமான சொத்துக்களாகும் என்றும், தாவா **'B' schedule** சொத்துக்கள் 1ம் மனுதாரின் தாயாரான பொன்னுமுத்தம்மாளுக்கு பாத்தியமான பூர்விகச் சொத்துக்களாகவும் இருந்து வருகிறது என்றும், 1ம் மனுதாரின் தகப்பனார் நாகு அம்பலத்தேவர் மற்றும் 1ம் மனுதாரின் தாயாரான பொன்னுமுத்தம்மாள் ஆகியோர்களுக்குப் பிறந்தவர்கள் தான் 1ம் மனுதார், வழக்கில் 11ம் பிரதிவாதி ஆகிய இரண்டு பெண் மக்கள் ஆவார்கள் என்றும், மேலும் 1ம் மனுதாரின் சகோதரரும், 1ம் எதிர்மனுதாரின் கணவர் மற்றும் 2 முதல் 5 எதிர்மனுதார்களின் தகப்பனார் சுப்பிரமணியன் மற்றும் 1ம் மனுதாரின் சகோதரரும், 6,7 எதிர்மனுதார்களின் தகப்பனார் ராஜு ஆகிய இரு ஆண் மக்கள் உட்பட நான்கு பேர்களும் 1ம் மனுதாரின் பெற்றோர்களின் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள், 1ம் மனுதாரின் தகப்பனார் நாகு அம்பலத்தேவர் உயிருடன் இருந்த காலம் முதல் தாவா **'A' schedule** சொத்துக்கள் மற்றும் தனது மனைவி பெயரில் உள்ள **'B' schedule** சொத்துக்களும் இந்து பொதுக்குடும்பச் சொத்துக்களாக வைத்து இந்து பொதுக்குடும்பத்தின் மேனேஜர் என்ற நிலையில், தாவாச் சொத்துக்கள் உட்பட தனது குடும்பச் சொத்துக்களை பொதுவாக 1ம் மனுதாரருடன் சேர்ந்து அனுபவித்தும், பராமரித்தும் வந்தார்.

மேலும் மனுதாரர்கள் தங்களது மனுவில் இந்நிலையில் 1ம் மனுதாரின் தகப்பனார் கடந்த 18.01.1993 ஆம் தேதியிலும், மேற்படியார்களின் தாயார் கடந்த 2003 ஆம் வருடத்திலும் தாவாச் சொத்துக்களைப் பொறுத்தும் யாதொரு ஆவணமும் ஏற்படுத்தாமல் intestate ஆக இறந்துவிட்ட நிலையில், 1ம் மனுதாரரும் 1ம் மனுதாரரின் சகோதரரான இறந்து போன சுப்பிரமணியன் மற்றும் ராஜுவும் தாவாச் சொத்துக்களையும் வாரிசு கிரமமாக பாத்தியம் அடைந்து, பின்னீடு இந்த 1ம் மனுதாரரும் 1 முதல் 7 எதிர்மனுதார்களுடன் சேர்ந்து கூட்டாக யாதொரு பிரிவினையும் செய்து கொள்ளாமல், நாளது தேதிவரை பொதுவாக அனுபவம் செய்து வந்ததாகவும், இந்நிலையில், 1ம் மனுதாரரும் பெண் பாலராக இருந்தமையால், மனுதாரரது சகோதரரான 1ம் எதிர்மனுதார் கணவர்

சுப்பிரமணித்தின் மீது அதிக நம்பிக்கை கொண்டவராக இருந்தமையாலும், 1ம் மனுதாரர் இந்து பொதுகுடும்பத்தில் மேற்படியாரே மூத்த ஆண் வாரிசாக இருந்தமையாலும், தாவா **'A' schedule** சொத்துக்களில் 1ம் மனுதாரின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவும் மேற்படி சுப்பிரமணியன் பெயரில் ரெவின்பு நடவடிக்கைகளில் பெயரளவில் மாற்றப்பட்டாலும், சொத்துக்களில் எவ்வித தனித்த உரிமையும் கோராமலும், தாவா **A,B schedule** சொத்துக்களையும் 1ம் மனுதார் மற்றும் 1ம் மனுதாரரின் சகோதர்களும் யாதொரு பிரிவினையும் தனித்து அத்துமால் செய்து பிரித்துக் கொள்ளாமல் அவரவர் கண்டேத்தமாக தனது தகப்பனார் காலத்தில் எவ்விதம் அனுபவம் செய்து வந்தனரோ, அவ்விதம் தொடர்ந்து அனுபவம் செய்து வந்தனர்.

மேலும் மனுதாரர்கள் தங்களது மனுவில் 1ம் மனுதாரரும் வயதானவராக இருந்தமையாலும், 1ம் மனுதாரின் மகனான 2ம் மனுதாரர் உட்பட 1ம் மனுதாரர்களுக்கு வாரிசுகள் உள்ளதாலும், தாவாச் சொத்துக்களை சட்டப்படி பாகம் பிரித்து தர 1ம் எதிர்மனுதார் கணவரும், 1ம் மனுதாரின் சகோதரரான சுப்பிரமணியத்திடம் 1ம் மனுதாரர் உயிருடன் இருந்த போது கோரியதில், 1ம் மனுதாராரும் பிரித்து தருவதாக உறுதி கூறிய நிலையில், இந்த 1ம் மனுதாரின் இளைய சகோதரரான ராஜுவும் 1999ம் ஆண்டு திடீரென இறந்துவிட்டார் என்றும், தொடர்ந்து இந்த 1ம் மனுதாரின் சகோதரரும், 1ம் எதிர்மனுதாரரின் கணவரான சுப்பிரமணியனும் கடந்த 2015 ஆம் வருடம் இறந்துவிடவே, 1ம் மனுதாரரும் தாவாச் சொத்துக்களில் தங்களின் 1/4 பாகத்தையும் எப்போதும் போல் தொடர்ந்து அமைதியாக அனுபவம் செய்து வந்ததாகவும், இந்நிலையில் இந்த 1ம் மனுதாரின் மகனான 2ம் மனுதாரரும், 2ம் மனுதாரது சகோதரருடன் இணைந்து தாவாச் சொத்துக்களில் வயதான 2ம் மனுதாரது தாயாரின் பாகத்தையும் விவசாய காலங்களில் மேற்படியாருக்கு உதவியாக இருந்து வழக்கம் போல் விவசாய வேலைகளை செய்து வரும் நிலையில், தற்போது மழை பெய்து விவசாய வேலை செய்யும் விதமாக தாவா **'A' schedule** சொத்தில் 8 வது லக்கனமான புலஎண். 121/9ல் உள்ள கருவை மரங்களை எப்போதும் போல் வெட்டி சுத்தம் செய்து அனுபவம் செய்து வந்த நிலையில், மேற்படி சொத்தில் நூதன உரிமை கொண்டாடிக் கொண்டு 10ம் எதிர்மனுதார் இளையான்குடி காவல் நிலையத்தில் மனுதாரர்களின்

அமைதியான அனுபவத்தை தடை செய்யும் விதமாக பொய் புகார் கூறி மேற்படியார்களின் அனுபவத்தையும் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மூலம் தடுத்து நிறுத்த முயற்சித்ததால், மனுதாரர்களும் தாவாச் சொத்தில் மனுதாரர்களுக்கும் சட்டப்படி 1/4 பாக உரிமை உள்ளதை எடுத்துக் கூறியும், அதனை பொருட்படுத்தாமல் காவல்நிலையத்தில் சில வெள்ளைப் பேப்பரில் இந்த 1ம் மனுதாரின் இளைய மகனை அச்சுறுத்தி சட்டவிரோதமாக கையொப்பம் பெற்று மேற்படி சொத்தை அனுபவம் செய்யக்கூடாதென எச்சரித்து கடந்த 15.10.2022ல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அனுப்பியுள்ளதாகவும், அவ்விதம் செய்யவும் 10 எதிர்மனுதாரருக்கோ, காவல்துறைக்கோ எவ்வித உரிமையும் சட்டப்படி இல்லை என்றும், மேலும் மேற்படி சொத்தில் மனுதாரர்கள் வகையறாவுக்கு சொந்தமான புளியமரம் இருந்து வரும் நிலையில், அதன் பலன்களையும் மனுதாரர்களே நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகின்றனர்.

மேலும் மனுதாரர்கள் தங்களது மனுவில், இந்நிலையில் மனுதாரர்கள் ஊரில் உள்ள முக்கியஸ்தர்கள் மூலம் தாவா சொத்துக்களில் 1ம் மனுதாரின் 1/4 பாக உரிமையை நியமிடர் பிரித்து தனித்து அத்துமால் செய்து, பட்டா மாற்றித்தர கடந்த 16.10.2022ந் தேதி 1 முதல் 6 எதிர்மனுதார்களிடம் கோரியதில், மேற்படியார்களும் பிரித்து தருவதாக கூறி 8 முதல் 10ம் எதிர்மனுதார்களுடன் collusive ஆக இருந்து கொண்டு வீண் விவகாரம் செய்து வந்ததாகவும், இந்நிலையில் 1 முதல் 3 எதிர்மனுதார்களுக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்தும் 1 முதல் 5 வழக்கில் பிரதிவாதிகளுடன் collusive ஆக இருந்து கொண்டு, Sham and nominal ஆக ஏற்படுத்தி மனுதாரர்களது அமைதியான அனுபவத்தை தடை செய்யவும், சொத்துக்களை பிறத்தியில் பந்தக பராதீனம் செய்யவும் கடந்த 18.10.2022ம் தேதி முதல் முயற்சித்து வருகிறார்கள் என்றும், அவ்விதம் செய்யவும் 3ம் தரப்பினரான 1 முதல் 3 எதிர்மனுதார்களுக்கு யாதொரு சட்டப்படி உரிமையில்லை என்றும், மேற்படியார்களின் சட்டவிரோத செயல்களையும் சமூகம் மூலம் தடை செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், Prima facie case ம் balance of convenience ம் மனுதாரர்களுக்கே சாதமாக உள்ளது என்றும், தாவா சொத்துக்களில் 1ம் மனுதாரின் 1/4 பாகத்தையும் நியமிடர் பார்த்து அத்துமால் செய்து பிரித்து 1ம் மனுதார் வசம் ஒப்படைக்கும் வரை தாவா சொத்துக்களைப்

பொறுத்து இந்த நிர் எதிர்மனுதார்களோ, மேற்படியார்களின் ஆட்களோ யாதொரு வில்லங்கமோ, விற்கிரையமோ, பந்தக பராதீனமோ செய்யாதவாறு தாவா வழக்கு முடியும் வரை ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பித்தும், அதே டேர்ம்ஸில் தாவா மனு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பிலான எதிர்உரையின் சுருக்கம்: (2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மேற்கோள் செய்யப்பட்டது)**

எதிர்மனுதாரர்கள் தங்களது எதிர்உரையில், வாதிகள் தங்கள் பிராதில் 1,2 வாதிகளின் தகப்பனார் கடந்த 18.01.1993ம் தேதியிலும் எதிர்மனுதார்களின் தாயார் கடந்த 2003ம் வருடத்திலும் தாவாச் சொத்துக்களைப் பொறுத்தும் யாதொரு ஆவணமும் ஏற்படுத்தாமல் intestate ஆக இறந்துவிட்டதாகச் சொல்லியிருப்பதில் இறந்துவிட்டது உண்மையாக இருக்கலாம் ஆனால் ஆவணங்கள் ஏதும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதாகச் சொல்லியிருப்பது முற்றிலும் பொய் என்றும், நாகுஅம்பலத் தேவர் உயிருடன் இருக்கும பொழுதே 'A' Schedule கண்டுள்ள சொத்துக்கள் உட்பட இன்னும் சுமார் 30 லக்க நஞ்சை, புஞ்சை சொத்துக்களையும் சேர்த்து அவரும் அவரது வாரிசுகளான வாதிகள் உள்ளிட்ட நான்கு வாரிசுகளும் சேர்ந்து 06.08.1988ம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை வர்த்தமானம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்றும் இதில் வாதிகளும் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் மேற்படி வர்த்தமானத்தில் இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் தவிர்த்து இன்னும் பல லக்கச் சொத்துக்கள் இருப்பதில் அவைகளையும் இவ்வழக்கில் வாதிகள் சேர்க்காமல் வழக்கிட்டிருப்பதற்கு வாதிகள் காரணம் ஏதும் இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றும் எனவே இப் பாகப்பிரிவினை வழக்கும் பாகப்பிரிவினைக்கான அனைத்து சொத்துக்களையும் சேர்க்கவில்லை Partial Partition என்ற அடிப்படையில் பாதிக்கப்படுவதாகவும் உள்ளது என்றும், 06.02.1988ம் தேதியில் வாதி வழக்குப் பிராதில் குறிப்பிடும் நாகுஅம்பலத்தேவர் உயிருடன் இருக்கும் பொழுதே அவரும் அவரது வாரிசுகளும் சேர்ந்து பாகப்பிரிவினை செய்துகொண்டு அது சம்பந்தமாக பாகப்பிரிவினை வர்த்தமானம் ஏற்படுத்திக் கொண்டு அதன்மூலம் அவரவர்களுக்கு

கிடைத்த சொத்துக்களையும் தனித்த வகையில் பலருக்கும் கிரையப் பத்திரங்கள் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு அவைகள் எல்லாவற்றையும் மறைத்து வாதிகள் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிகள் வழக்குச் சொத்துக்களையும் எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், மேலும் இந்த 1,2 வாதிகளின் பெற்றோர்களும் உயிருடன் இருந்த காலத்தில் இந்த 1,2 வாதிகளின் திருமணத்தின் போது சில சொத்துக்கள் சீதனமாக வழங்கப்பட்டு அதுவும் இந்த 1,2 வாதிகளின் தனித்த அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்று சொல்லியிருப்பதனை வாதிகள் நிரூபித்துக் கொள்ள வேண்டியது என்றும், வாதிகளும் தங்கள் பிராதில் மேலும் இந்த 1,2 வாதிகளும் பெண் பாலராக இருந்தமையாலும் அவர்களது சகோதரியான 1ம் பிரதிவாதியின் கணவர் சுப்பிரமணியத்தின் மீது அதிக நம்பிக்கை கொண்டவராக இருந்தமையாலும் மேற்படி இந்த 1,2 வாதிகள் இந்து பொதுக்குடும்பத்தில் மேற்படியாரே மூத்த ஆண் வாரிசாக இருந்தமையாலும் தாவா சொத்துக்களில் 1,2 வாதிகள் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவும் மேற்படி சுப்பிரமணியன் பெயரில் ரெவின்யு நடவடிக்கைகளில் பெயரளவில் மாற்றப்பட்டாலும் மேற்படி சொத்துக்களில் எவ்வித தனித்த உரிமையும் கோராமல் தாவா A,B Schedule சொத்துக்களையும் 1,2 வாதிகள் மற்றும் மேற்படியார்களின் சகோதர்களும் யாதொரு பிரிவினையும் தனித்து அத்துமால் செய்து பிரித்துக் கொள்ளாமல் அவரவர் கண்டேத்தமாக அவர்களது தகப்பனார் காலத்தில் எவ்விதம் அனுபவம் செய்து வந்தனரோ அவ்விதம் தொடர்ந்து அனுபவம் செய்து வந்தனர் என்றும் சொல்லியிருப்பது தவறு என்றும் அதனையும் வாதிகளே நிரூபிக்க வேண்டும் என்றும் இச்சொத்துக்களில் வாதிகளுக்கு அனுபவம் ஏதும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர்கள் தங்களது எதிர்உரையில் வழக்கு A,B Schedule உள்ள சொத்துக்கள் அனைத்திலும் வாதிகளுக்கு பாக உரிமையேதும் கிடையாது சில சொத்துக்கள் குறிப்பாக A Schedule ல் கண்டுள்ள 5வது லக்கச் சொத்தும் B Schedule ல் கண்டுள்ள 2,3 லக்கச் சொத்துக்களும் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு தனித்த பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், வாதிகளின் மற்ற பிராது விபரங்களும் இந்தப் பிரதிவாதியால் வன்யைாக மறுக்கப்படுகின்றது என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தையும் வாதிகளே இவ்வழக்கில் தகுந்த வகையில் நிரூபணம் செய்து

கொள்ள வேண்டியது என்றும், வாதிகளும் தங்கள் பிராதில் 1ம் வாதியின் மகனான 3ம் வாதியும் தனது சகோதரருடன் இணைந்து தாவாச் சொத்துக்களில் வயதான தனது தாயாரின் பாகத்தையும் விவசாய வேலைகளை எதிர்மனுதாரருக்கு உதவியாக இருந்து வழக்கம் போல் விவசாய காலங்களில் வேலைகளை செய்து வந்ததாகவும் மழை பெய்து விவசாய வேலை செய்யும் விதமாக தாவா **'A' Schedule** சொத்தில் 8 வது இலக்கமான புல எண். 129/9 உள்ள கருவை மரங்களை எப்போதும் போல் வெட்டி சுத்தம் செய்து அனுபவம் வந்ததாகவும் கூறியிருப்பது பொய் மேற்படி புல எண் சொத்து **'A' Schedule** ல் 5 வது லக்கச் சொத்தாகக் காட்டப்பட்டுள்ளது என்றும் அதுவும் எக்காலத்திலும் கருவை மரங்கள் இருந்தது இல்லை என்றும் அதுவும் வாதிகளின் தகப்பனார் ஏற்படுத்திக் கொடுத்துள்ள பாகப்பிரிவினையின் மூலம் 1ம் பிரதிவாதியின் கணவரான சுப்பிரமணியன் என்பவருக்கு கிடைத்து அவரும் பாத்தியானுபவம் செய்து வந்து இறந்தமேல் அவரது சட்டப்படியான வாரிசுகளான 1 முதல் 5 பிரதிவாதிகளிடமிருந்து சரியான பிரதிப்பிரயோஜனம் கொடுத்து இளையான்குடி சார்பதிவக ஆவண எண்கள் 753/2018, 419/2019,835/2019 கொண்ட மூன்று ஆவணங்கள் வாயிலாகக் கிரையம் பெற்று தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்துகொண்டு பாத்தியானுபவம் செய்து வருகின்றார் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர்கள் தங்களது எதிர்உரையில் வாதிகளும் வர்த்தமானம், 10ம் பிரதிவாதிக்கான கிரையம் ஆகிய அனைத்து விசயங்களையும் தெரிந்து கொண்டே பிரதிவாதிகளுக்கான வீண் அழைக்கழிவு கொடுக்க வேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் அதன்பின்பு சொத்தில் நூதன உரிமை கொண்டாடிக் கொண்டு 10ம் பிரதிவாதியும் இளையான்குடி காவல் நிலையத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தை தடை செய்யும் விதமாக புகார் கூறி மேற்படியார்களின் அனுபவத்தையும் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மூலம் தடுத்து நிறுத்த முயற்சித்ததால் வாதிகளும் தாவாச் சொத்தில் தங்களுக்கும் சட்டப்படி 1/2 பாக உரிமை உள்ளதை எடுத்துக்கூறியும் அதனை பொருட்படுத்தாமல் காவல் நிலையத்தில் சில வெள்ளைப் பேப்பரில் இந்த 1ம் வாதியின் இளைய மகனை அச்சுறுத்தி சட்டவிரோதமாக கையெப்பம் பெற்று சொத்தை அனுபவம் செய்யக்

கூடாதென எச்சரித்து கடந்த 15.10.2022ல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அனுப்பியுள்ளார் என்றும், அவ்விதம் செய்யவும் 10ம் பிரதிவாதிக்கோ, காவல்துறைக்கோ எவ்வித உரிமையும் சட்டப்படி இல்லை என்றும், சொத்தில் இந்த வாதிகள் வகையறாவுக்கு சொந்தமான புளியமரம் இருந்து வரும் நிலையில் அதன் பலன்களையும் இந்த வாதிகளே நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகின்றனர் என்றும், இந்நிலையில் 1,2 வாதிகளும் ஊரில் உள்ள முக்கயஸ்தர்கள் மூலம் தாவா சொத்துக்களில் தங்களின் 1/2 பாக உரிமையை நயமிடர் பிரித்து தனித்து அத்துமால் செய்து பட்டா மாற்றித்தர கடந்த 16.10.2022ம் தேதி 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் கோரியதில் மேற்படியார்களும் பிரித்து தருவதாக கூறி 8 முதல் 10ம் பிரதிவாதிகளுடன் Collusive ஆக இருந்து கொண்டு வீண் விவகாரம் செய்து வருகின்றார்கள் என்றும் சொல்லியுள்ள பிராது விபரங்கள் பிரதிவாதியால் வன்மையாக மறுக்கப்படுகின்றது என்றும் 10ம் பிரதிவாதிக்கான கிரையச் சொத்தில் வாதிகளுக்கு பாக உரிமையேதும் கிடையாது புளிய மரமும் கிடையாது என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர் தனது எதிர்உரையில், இந்நிலையில் இந்த 1,2 வாதிகளும் தாவா சொத்துக்களைப் பொறுத்து எவ்வித உரிமையும் சட்டப்படி இல்லாத 8 முதல் 10ம் பிரதிவாதிகளும் தாவா செய்வதால் கடந்த 17.10.2022ல் வில்லங்கச் சான்றிதழ் பெற்ற நிலையில் தாவா **'A' Schedule** சொத்தின் தாவா 8 வது இலக்கத்தைப் பொறுத்தும் 1 முதல் 6 பிரதிவாதிகளும் இந்த 1,2 வாதிகள் வயதானவர்களாகவும் பெண் பாலராகவும் உள்ளதை சாதகமாக எடுத்துக் கொண்டு யாதொரு விசாரணையும் இன்றி தங்களது பெயரில் சட்டவிரோதமாக ரெவின்யு **Board Standing** விதிமுறைகளுக்கு புறம்பாக பட்டா மாறுதல் செய்து கொண்டு அதில் புல எண். 121/9 யைப் பொறுத்தும் கடந்த 04.06.2018ம் தேதியிட்டு ஆவண எண். 753/2018 என சுமார் 32 செண்டு அளவுள்ளதை 1,2 பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளது போலவும், பின்பு கடந்த 11.03.201 ம் தேதியிட்டு 3,5 பிரதிவாதிகள் 10 பிரதிவாதிக்கு கிரைய ஆவண எண். 419/2019ம் ஏற்படுத்தியுள்ளது போலவும் தொடர்ந்து கடந்த 23.05.2019ம் தேதியிட்டு 4ம் பிரதிவாதி கிரைய ஆவண எண். 835/2019 மூலம் 15 சென்ட் நிலத்தை 10ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தியுள்ளது போன்றும், இந்த 1,2 வாதிகளின் 1/2

பாகஉரிமையை மோசடி செய்து ஏமாற்றும் விதமாக மலரணையாக கிரைய ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளதும் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும் அதுவும் இந்த 1,2 வாதிகளின் பாகப் பாத்தியத்தையும் சட்டப்படி கட்டுப்படத்தக் கூடியதுமில்லை என்றும், இந்த 1ம் பிரதிவாதியின் கணவரும் மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனார் சுப்பிரமணியனும் தாவா **'B' Schedule** சொத்தான அவரது தாயாரின் பெயரில் கடந்த 05.03.2014ம் தேதியிட்டு புல எண். 120/11 யைப் பொறுத்து ஆவண எண். 349/2014 என ஒரு மோசடி கிரைய ஆவணத்தையும் மலரணையாக ஏற்படுத்தியுள்ளதுடன் மேற்படியாரின் சொத்தை தொடர்ந்து வில்லங்கப்படுத்தும் எண்ணத்துடன் மேற்படியாரின் மகன் 9ம் பிரதிவாதி பெயரில் எதிர்மனுதாரரது குடும்பச் சொத்துக்களுடன் சேர்ந்து கடந்த 14.07.2017ம் தேதியிட்டு ஆவண எண். 763/2017 என செட்டில்மெண்ட் ஆவணமும் மோசடியாக ஏற்படுத்தியள்ளதாகவும், இந்த 1,2 வாதிகளின் பாகத்தையும் சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடியதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர்கள் தங்களது எதிர்உரையில் என்றும், பிரதிவாதிகள் 1 முதல் 5 மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் இந்த 1,2 வாதிகளின் பாக உரிமையை மோசடி செய்து தங்களுக்குள் Collusive இருந்து ஏற்படுத்தியுள்ள ஆவணங்களும் எப்போதும் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றும், ஆவணங்களும் சட்டப்படி செல்லக் கூடியதில்லை என்றும் அவை **Null and Voind** ஆக உள்ளதாகவும், ஆவணங்களின்படி மூன்றாம் தரப்பினரான 8 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களில் எவ்வித அனுபவமும் கோர சட்டப்படி தகுதியில்லை என்பதுடன், மேற்படியார்கள் வாதிகள் வகையறாவின் அமைதியான அனுபவத்தை தடை செய்யவோ மற்றும் காவல்துறை மூலம் அகற்றி இந்த 1,2 வாதிகளின் அமைதியான அனுபவத்தை தடுக்கவோ 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் சட்டப்படி யாதொரு உரிமையும் இல்லை என்றும் சொல்லியுள்ள ஒவ்வொரு எழுத்தும், வார்த்தையும், வரியும் இந்தப் பிரதிவாதியால் வன்மையாக மறுக்கப்படுகின்றது என்றும், வாதிகள் தங்கள் பிராதில் மேலும் பிரதிவாதிகள் தாவா சொத்துக்கள் அனைத்தையும் பிறத்தியில் விற்கிரையம் செய்யப்போவதாகவும் புல எண். 121/9ல் உள்ள புளியமரத்தை அடியாட்கள் சகிதம் வெட்டப் போவதாகவும், ஊரில் கடந்த 18.10.2022 முதல் பிரஸ்தாபித்து வருவதாகவும் எதிர்மனுதாரர்களின் சட்டவிரோத

செயலையும் சமூகம் நீதிமன்றத்தின் மூலம் தடை செய்வதுடன் தாவாச் சொத்துக்களில் இந்த 1,2 வாதிகளின் 1/2 பாகத்தையும் சமூகம் நீதிமன்றத்தின் மூலம் நியமிடர் பார்த்து பிரித்து அத்துமால் செய்து தனித்து சுவாதீனம் பெறத்தக்கதாய் பிரதிவாதிகள் மீது தாவாச் சொத்துக்களைப் பொறுத்தும் இறுதிநிலை தீர்ப்பாணை உத்திரவும் பிறப்பிக்க வேண்டியதாய் உள்ளது என்றும், சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு இருக்கும் உரிமையை ஆட்சேபிக்க வாதிகள் தகுதியற்றவர்கள் என்றும், வாதிகளுக்கு வழக்குச் சொத்துக்களில் பாத்தியம் இல்லாத நிலையில் பாகம் கோர இயலாது என்றும் வாதிகளுக்கு வழக்கு சொத்தை எக்காலத்திம் அனுபவிக்கவில்லை என்றும், பாகப்பிரிவினைக்காக வாதிகளின் குடும்ப உறுப்பினர்களக்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானத்தில் கண்டுள்ளபடியே வாதிகள் உரிமை கோர முடியுமே தவிர அனைத்துச் சொத்திலும் கோர முடியாது என்றும், வர்த்தமானத்தில் காட்டப்பட்டுள்ள பல சொத்துக்கள் இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராது பரிகாரத்தில் உள்ள விஸ்தீர்னத்திற்கான நான்குமாலையும் வாதி தாக்கல் செய்திருக்கும் சொத்து விபரத்தின் நான்குமால் விபரமும் தவறு என்பதால் வாதியின் பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டியதாய் உள்ளது என்றும், வாதிகளின் வழக்கு பொய்யான விபரங்களைச் சொல்லி சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகளின் வழக்கிற்கு என்று வழக்குமூலம் ஏதும் இல்லை என்றும் வாதிகளால் வழக்குப் பிராதில் சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் முற்றிலும் கற்பனையாகும் என்றும் வழக்குச் சொத்திற்கும் உரியமுறையில் மதிப்பிட்டு நீதிமன்றக் கட்டணம் கட்டப்படவும் இல்லை என்றும், எனவே வாதிகளின் வழக்கு பிராதும் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் உள்ளது என்றும், வாதி தாக்கல் செய்துள்ள இந்த பிராதையும் பிரதிவாதிகள் தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

**5.** வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:

**கேள்வி:**

1. மனுதாரர்கள்/வாதிகள் மனுவில் கோரியவாறு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
2. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**7.** இந்த நிர் மனுவின் 1ம் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் கணவரும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தந்தையுமான சுப்பிரமணியன், 6, 7 எதிர்மனுதாரர்கள் தந்தை ராஜு மற்றும் 11ம் பிரதிவாதி ஆகியோர் நாகு அம்பலத்தேவர், பொன்னுமுத்தம்மாள் தம்பதியரின் வாரிசுகள் என்றும் தாவா ஏ செட்டியூலில் கண்ட சொத்துக்கள் மேற்படி நாகு அம்மாள் தேவருக்கு பூர்வீகமாகவும், தாவா பி செட்டியூலில் கண்ட சொத்துக்கள் மேற்படி பொன்னுமுத்தம்மாளுக்கு பூர்வீகமாகவும் பாத்தியமாக இருந்து அவர்கள் அனுபவித்து வந்து அவர்கள்இறப்பிற்கு பின்னர் தாவா ஏ, பி செட்டியூலில் கண்ட சொத்துக்கள் 1ம் மனுதாரர்/1ம் வாதி மற்றும் மேற்சொன்ன சுப்பிரமணியன், ராஜு, 11ம் பிரதிவாதி ஆகியோர் பொதுவில் வைத்து கூட்டாக அனுபவித்து வரும் பூர்வீக சொத்துக்கள் என்றும், தாவா சொத்துக்கள் பொறுத்து 1ம் மனுதாரர்/1ம் வாதிக்குரிய 1/4 பாகத்தை பாகம்பிரித்து தரக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் இம்மனுவின் எதிர்மனுதாரர்களான 8, 9, 10 எதிர்மனுதாரர்கள் ஆகியோர் தாவா சொத்துக்களை 3ம் நபர்களுக்கு விற்கிரையம் உள்ளிட்ட வில்லங்கம் ஏற்படுத்தி முயற்சித்து வருவதாகவும், ஆகையால் அசல் வழக்கு முடியும் வரை தாவா சொத்துக்களை எதிர்மனுதாரர்கள்/8 முதல் 10 பிரதிவாதிகள் 3ம் நபர்களுக்கு எவ்வித விற்கிரையம், வில்லங்கம் ஏற்படுத்துவதிலிருந்து தடை செய்யும் வகையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டும் என்பதே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்காகும் .

**8.** எதிர்மனுதாரர்/8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் நாகு அம்பலத்தேவர் மற்றும் பொன்னுமுத்தம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட அவர்கள் உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்துக்கள் உள்பட இன்னபிற

சொத்துக்கள் மேற்படியாரின் வாரிசுகளான 1ம் மனுதாரர்/1ம் வாதி, 11ம் பிரதிவாதி மற்றும் சுப்பிரமணியன், ராஜு இடையே 06.02.1988 பாகப்பிரிவினை ஏற்பட்டு அது தொடர்பாக வாரிசுகளுக்கிடையே பாகப்பிரிவினை வர்த்தமான எழுதிக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி பாகப்பிரிவினையின் படி அவரவர் பாகச்சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்துக்களில் 1ம் மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாக உரிமை இல்லை என்பதே எதிர்மனுதாரர்/8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்காகும்.

**9.** தாவா சொத்துக்களை பொறுத்து நாகு அம்பலத்தேவர் மற்றும் பொன்னுமுத்தம்மாள் தம்பதியின் வாரிகளுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்பது குறித்து இம்மனுவில் பரிசீலனை செய்தால் அதுஅசல் வழக்கில் பிறப்பிக்கும் தீர்ப்புரையில் பிரதிபலிக்கும். ஆதலால் தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்பட்டதா, இல்லையா என்பது குறித்து தற்பொழுது பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமோ, சூழலோ இல்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.** மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1ன் கீழான இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படும் என 1. Prima Facie Case 2. Balance of Convenience 3. Irreparable Loss and Injury ஆகியவை மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக உள்ளதா என கவனத்தில் கொள்ளவேண்டும். இம்மனுவில் தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரர்/8 முதல் 10 பிரதிவாதிகள் வில்லங்கம் ஏற்படுத்த முயன்று வருவதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான முதல்தோற்ற வழக்கு ஏதும் காணப்படவில்லை. வாதத்திற்காக தாவா சொத்துக்கள் பொறுத்து எதிர்மனுதாரர் விற்கிரையம் ஏதும் செய்தால் அது எவ்வகையிலும் தாவா சொத்துக்களில் 1ம் மனுதாரர்/1ம் வாதிக்கு உரிய பாகஉரிமை உள்ளது கட்டுப்படுத்தாது. மேலும் அவ்வாறு வழக்குச்சொத்தினை பிற நபர் கிரையம் பெற்றால் கிரையம் பெறுநர் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் சேர்த்து பாகம்

பிரிக்கப்படலாம். இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க மறுக்கும் பட்சத்தில் அவை 1ம் மனுதாரர்/1ம் வாதியின் பாக உரிமையை பாதிப்புள்ளாக்காது. 1ம் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்போ, பல வகை வழக்குகள் எழுவதற்கோ வாய்ப்பில்லை. மேலும் தாவா சொத்துக்களை எதிர்மனுதாரர் விற்க முயன்று வருகின்றனர் என்று மனுதாரர்கள் அச்சம் மட்டும் கருத்திற்கொண்டு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது.

**11.** மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் இம்மனுவில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1ன் கீழான சூழ்நிலைகளோ, முதல்தோற்ற வழக்கோ, ஈடு செய்ய இயலாத இழப்போ மனுதாரர்கள்/வாதிகளுக்கு சார்பாக இல்லை என தீர்மானித்து மனுதாரர்கள்/வாதிகள் மனுவில் கோரியவாறு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகின்றது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதார்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள்/8, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**